**செய்தி வெளியீடு எண்: 845** **நாள்: 17.11.2018**

**<u>இன்று (17.11.2018), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் சேலம் மாவட்டம், மேச்சேரியில், மேச்சேரி–நங்கவள்ளி கூட்டுக் குடிநீர் திட்ட திறப்பு விழாவில் ஆற்றிய உரை:</u>**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் மேச்சேரி–நங்கவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் மேட்டூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் 67 குடியிருப்புகளும், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் 338 குடியிருப்புகளும், மேச்சேரி, பி.என்.பட்டி மற்றும் வீரக்கல்புதூர் ஆகிய மூன்று பேரூராட்சிகளிலும் என மொத்தம் 405 குடியிருப்புகளுக்கு தடையின்றி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் இன்றையதினம் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் 60 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கும், தூய்மை பார்வை இயக்கத்தின் சார்பில் 90 பயனாளிகளுக்கு தனி நபர் இல்ல கழிப்பறைகள் கட்டுவதற்கும் என மொத்தம் 150 பயனாளிகளுக்கு ரூபாய் 1,15,80,000 மானியத் தொகையும், மகளிர் திட்டம் சார்பில் 14 மகளிர் சுயஉதவிக் குழுவும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு பாதுகாப்பு நிதி உதவியும், ஒரு மகளிருக்கு அம்மா இருசக்கர வாகன மானியம் என 151 பயனாளிகளுக்கு ரூபாய் 3,75,000 நிதியுதவியும், வருவாய்த் துறையின் சார்பில் 394 பயனாளிகளுக்கு ரூபாய் 19,79,600 மதிப்பீட்டில் கல்வி உதவித் தொகை, கணவனால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை, முதியோர் உதவித் தொகை, விதவை உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை மற்றும் இலவச வீட்டு மனைப்பட்டா மற்றும் நிலவரித் திட்டப் பட்டா

உள்ளிட்டோர்களுக்கும், வேளாண்மைத் துறை சார்பில் 25 விவசாயிகளுக்கு ரூபாய் 2,46,800 மதிப்பீட்டில் தெளிப்பு நீர் பாசனக் கருவி, மழைத்தூவான் கருவி, விதைகள் மற்றும் வேளாண் கருவிகள், வேளாண் பொறியியல் துறையின் சார்பில் வேளாண் இயந்திரங்கள் திட்டத்தின் கீழ் வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் அமைப்பதற்கு ரூபாய் 15 இலட்சம் மானியம், தோட்டக்கலைத் துறையின் சார்பில் 20 விவசாயிகளுக்கு ரூ.18,10,200 மதிப்பீட்டில் சொட்டு நீர் பாசன நிலப் போர்வை, தெளி நீர் பாசனம், பசுமைக் குடில், வெங்காய சேமிப்புக் கிடங்கு அமைப்பதற்கான மானியம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பில் ரூ.1 இலட்சம் மதிப்பீட்டில் 10 பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரம், 10 பயனாளிகளுக்கு விலையில்லா சலவைப் பெட்டிகள், மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் திட்டத்தின் கீழ் சுயநிதித் திட்ட 1 பயனாளிக்கு ரூபாய் 95 ஆயிரம் மானியம், பொதுச் சுகாதாரம் மற்றும் மருத்துவத் துறையின் சார்பில் மாணவர்களுக்கு ரூபாய் 2 ஆயிரம் மதிப்பீட்டில் கணிப்பொறி, கூட்டுறவுத் துறையின் சார்பில் 50 நபர்களுக்கு ரூபாய் 37,90,000 மதிப்பீட்டில் மாநில கடனுதவி மற்றும் பயிர்க் கடனுதவி, ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூபாய் 20 ஆயிரம் மதிப்பீட்டிலான இலவச வீட்டு மனைப் பட்டாக்கள், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் சார்பில் 1 மாற்றுத்திறனாளிக்கு ரூபாய் 25,000 சுயஉதவி தொடங்குவதற்கான வங்கிக் கடன் மானியம் என மொத்தம் 825 பயனாளிகளுக்கு ரூபாய் 2,15,21,800 மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்டப் பணிகள் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்படவுள்ளது என்பதை பெருமையுடன் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

புரட்சித்தலைவி அம்மாவின் ஆட்சிக்காலத்தில் 2011–லிருந்து 2016 வரைக்கும் ஏழு ஆண்டுகளில் குடிநீர் திட்டங்களுக்கு செயல்படுத்தப்பட்ட விவரங்களை தெரிவிக்க விரும்புகின்றேன். 598 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ. 2,641.35 இலட்சம் மதிப்பீட்டில் 598 குடியிருப்பு திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு, 52,750 குடும்பங்கள் சுமார் 2.11 இலட்சம் மக்கள் பயன்பெற்று வருகிறார்கள். அதேபோல, 20 ஊராட்சி ஒன்றியங்களில் 447 பள்ளிகள், 431 அங்கன்வாடி மையங்கள், 7 மாணவ மாணவியர் விடுதிகளுக்கு ரூ. 387.64 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வழங்கும் திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

குடிநீர் ஆதாரங்களை செறிவூட்டுவதற்காக 157 தடுப்பணைகள் ரூ.1150.16 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன. ஆத்தூர், நரசிங்கபுரம் நகராட்சியில் 20 பேரூராட்சிகள் மற்றும் 8 ஒன்றியங்களுக்குட்பட்ட 1345 குடியிருப்புகளுக்கு 3.2 இலட்சம் குடும்பங்களுக்குசுமார் 13.13 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ. 270 கோடி மதிப்பீட்டில் கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு **63.35** மில்லியன் லிட்டர் அளவுக்கு சீரான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

எடப்பாடி, கொங்கணாபுரம் மற்றும் மகுடஞ்சாவடி ஒன்றியத்தைச் சார்ந்த 327 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ.46.45 கோடி மதிப்பீட்டில் 27,590 குடும்பங்கள் சுமார் 1.15 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் திட்டப்பணிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால் 28.12.2012 திட்டம் துவக்கி வைக்கப்பட்டது. எடப்பாடி நகராட்சிக்கும் கூட்டுக் குடிநீர் திட்டம் மூலமாக வழங்கப்பட்டது. அம்மாவினுடைய ஆட்சியில்தான் மேட்டூர் நகராட்சிக்கும் கூட்டுக்

குடிநீர் திட்டம் மூலமாக குடிநீர் வழங்கப்பட்டது. புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில்தான் சேலம் மாவட்டத்தில் கிட்டத்தட்ட ரூ. 391.28 கோடி மதிப்பீட்டில் 4,43,190 குடும்பங்களில் 18.02 லட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் பயன்பாட்டில் உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலைகளை விரிவாக்க வேண்டுமென்று வந்த கோரிக்கைகளின் அடிப்படையில், தளவாடியிலிருந்து மேட்டூர் வரை 4 வழிச்சாலை, மேட்டூரிலிருந்து தொப்பூர் வரை 4 வழிச்சாலை, மேச்சேரியிலிருந்து ஓமலூர் வரை சாலை விரிவாக்கம் செய்யப்படும். மேச்சேரிக்கு புறவழிச்சாலைகள் அமைக்கப்படும் என்ற செய்தியையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சேலத்திலிருந்து ஓமலூர் வரும் வழியில் உள்ள ரயில்வே கேட் உள்ளது. அங்கே ஒரு மேம்பாலம் கட்டுவதற்கு அம்மாவினுடைய அரசு ஆணையிட்டு, அந்தப் பணியும் துவக்கி வைக்கப்படும். ஓமலூரிலிருந்து மேட்டூர் வரைக்கும் பல இடத்தில் railway crossing இருக்கிறது. தொட்டப்பட்டியில் 19.34 கோடியில் உயர்மட்டப் பாலம் ரயில்வே கேட் குறுக்கே கட்டப்படும். முத்துநாயக்கன்பட்டியில் ரயில்வே கடவிற்கு குறுக்கே ரயில்வே மேம்பாலம் கட்டப்படும்.

மேச்சேரி ஒன்றியம், ஓமலூர் ஒன்றியம் போன்ற இடங்களில் சிறுகுறு விவசாயிகள் நிறைந்த பகுதி. மானாவரி தக்களியும் மற்றும் வேறு பல காய்கறிகள் உற்பத்தி இங்கு அதிகமாக இருக்கிறது. அதிகமாக தக்காளி உற்பத்தியாகும்பொழுது, தக்காளி விலை வீழ்ச்சியடையும்பொழுது, விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. அதனால், ஓமலூருக்கும் மேச்சேரிக்கும் இடையில் காய்கறி மற்றும் பழங்கள் விற்பனை

செய்யக்கூடிய மிகப் பெரிய மார்க்கெட் அமைத்துக் கொடுக்கப்படும். விவசாயி உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், பழங்கள் போன்றவை வீணாகாமல் இருப்பதற்காக அங்கே ஒரு குளிர்சாதன கிடங்கு அமைக்கப்படும். எனவே, விற்காத பழங்களை பாதுகாப்பாக அந்த குளிர்சாதன கிடங்கில் விவசாயிகள் எந்த வாடகையும் இல்லாமல் வைத்துக் கொள்ளலாம். விவசாயிகள் பயன்பெற வேண்டுமென்பதற்காக இந்தத் திட்டத்தை அம்மா அவர்களுடைய அரசு அறிவித்திருக்கின்றது. ஆகவே, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பழங்கள், காய்கறிகளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக இந்தத் திட்டத்தை கொண்டு வந்திருக்கின்றோம் என்பதை அன்போடு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தின் வாயிலாக, இன்றைக்கு, இரு மடங்கு உற்பத்தி, மும்மடங்கு இலாபம் விவசாயிகளுக்குக் கிடைக்கும்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக, நிலத்தடி நீர் குறைந்துவிட்டதால், தண்ணீரை சேமித்து, சொட்டு நீர்ப் பாசனம் மூலம் அதைப் பயன்படுத்தினால் விவசாயம் சிறக்கும். சொட்டு நீர்ப் பாசன கருவியும் ஒரு ஏக்கருக்கு 100 சதவிதம் மானியமும், அதற்கு மேல் இருக்கக்கூடிய நிலத்திற்கு ஒரு ஏக்கருக்கு 25 சதவிகிதம் மானியமும், வேளாண் கருவிகளும், டிராக்டர் வாங்கினால் மானியமும், பண்ணைத் திட்டத்தின் வாயிலாக நிறைய உதவிகளும், பண்ணைத் திட்டத்தின் வாயிலாக சின்ன, சின்ன குட்டைகள் கட்டுவதற்கு நிதியுதவியும், அம்மாவினுடைய அரசு வழங்குகிறது.

எங்கெல்லாம் ஓடைகள் இருக்கின்றதோ, எங்கெல்லாம் தண்ணீர் தேங்குவதற்கு வசதியிருக்கின்றதோ, அங்கெல்லாம் தடுப்பணை கட்டி, பருவ காலங்களில் பொழிகின்ற மழை நீரை சேமித்து, அதன் மூலம் நிலத்தடி நீரை உயரச் செய்து, குடிப்பதற்கு,

விவசாயத்திற்குத் தேவையான நீரை உருவாக்குகின்ற பணியைத் துவங்குவதற்காக 3 ஆண்டு கால திட்டத்தின் வாயிலாக ரூபாய் 1000 கோடி ஒதுக்கியுள்ளோம்.

மேட்டூர் அணை கட்டி 84 ஆண்டுகளாக தூர்வாராமல் இருந்ததை அம்மாவினுடைய அரசுதான் தூர்வாரி, அதன் மூலம் கிடைத்த வண்டல் மண், விவசாயிகளுக்கு இயற்கை உரமாகக் கிடைக்கிறது. எனக்கு முன்னால் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் செம்மலை அவர்கள் சொன்னதைப்போல, மிகப் பெரிய குடிமராமத்துத் திட்டத்திற்கு விவசாயிகளிடம் வரவேற்பு கிடைத்துள்ளது. இந்தத்திட்டத்தை அம்மாவினுடைய அரசு ஒரு சிறப்புத் திட்டமாக எடுத்து, ஏரிகள் ஆழப்படுத்தப்பட்டு, பொழிகின்ற மழைநீர் சேமித்து வைக்கப்படுவதுடன், நிலத்தடி நீர் உயர்ந்து, குடிநீர், விவசாயிகளுக்குத் தேவையான நீர் கிடைக்கின்றது. இத்திட்டம் முழுக்க, முழுக்க விவசாயிகள் மூலமாக நிறைவேற்றப்படுகிறது. இந்த ஆண்டு ரூபாய் 328 கோடி ஒதுக்கப்பட்டு, தமிழ்நாட்டில் 1511 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது.

காய்கறி மார்க்கெட் அமைப்பதற்கு, குளிப்பாசன வசதி, சிப்பம் கட்டுதல் அமைப்பை ஏற்படுத்துதல், எடைபோடும் மிஷின் அமைப்பு, வேளாண் தகவல் மையம், உதவி மையம், விவசாயிகள் தங்கும் வசதி, பயிற்சி மையம் அனைத்தும் இத்திட்டத்தின் வாயிலாக வருகின்றது. ஓமலூருக்கும், மேச்சேரிக்கும் இடைப்பட்ட சாலைகளில் பயிரிட்டுள்ள விவசாயிகள் இத்திட்டத்தினால் பயன்பெறுகின்றார்கள் என்பதை கோடிட்டுக் காட்டுகின்றேன். மேலும், விவசாயிகள் கொண்டு வருகின்ற பழங்கள், காய்கறிகளுக்கு உரிய விலை கிடைப்பதற்காக மின்னணு வர்த்தக ஏற்பாட்டை அம்மாவினுடைய அரசு செய்திருக்கிறது.

கோதாவரியையும், காவிரியையும் இணைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்கி விவசாயிகளுக்குத் தேவையான நீர் கிடைப்பதன் மூலம் வறட்சி என்பதே

இல்லாத ஒரு நிலையை உருவாக்குவதற்காக, மத்திய நீர்வளத் துறை அமைச்சர் நிதின் கட்கரி அவர்களிடம் தெரிவித்தவுடனே, நம்முடைய தமிழகத்திற்கு 125 டி.எம்.சி. தண்ணீர் வழங்கக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்போம் என்ற உறுதியைத் தந்திருக்கின்றார்கள். அப்படி தண்ணீர் கிடைக்கும்பொழுது, மேட்டூரிலிருந்து பல்வேறு ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு ஏரிகளில் சேமித்து வைக்கப்படும் என் மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான பணிகள் மேற்கொள்ள பொறியாளர்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். மேட்டூரிலிருந்து உபரி நீரை எடுத்து, மேட்டூர், ஓமலூர், எடப்பாடி, சங்ககிரி ஆகிய 4 சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஏரிகளை எல்லாம் நிரப்புவதற்கு ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயாராகிக் கொண்டிருக்கிறது. விரைவாக அந்தப் பணி துவங்கப்படும். இந்த உன்னதத் திட்டத்தை அம்மாவினுடைய அரசு 4 தொகுதிகளிலும் நிறைவேற்றித் தரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த திட்டங்களை அம்மா அரசு நிறைவேற்றித் தந்திருக்கிறது. 338 குடியிருப்புகளுக்கு மேச்சேரி–நங்கவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் தண்ணீர் கொடுக்கின்றோம். எதைச் சொன்னோமோ அதை இன்று சாதித்துக் கொண்டிருக்கின்றோம். தாலிக்குத் தங்கம், வேலைக்குச் செல்கின்ற பெண்களுக்கு அம்மா இருசக்கர வாகனம், கிராமங்களில் வாழ்கின்ற ஏழை, எளிய குடும்பத்தைச் சார்ந்து குழந்தைகளுக்குக்கூட சிறந்த கல்வி கிடைக்க வேண்டுமென்பதற்காக உயர்கல்வி கிடைக்கின்ற சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம். ஒரு மடிக்கணினி ரூபாய் 14 ஆயிரம் விலையுள்ளதை, விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 38 இலட்சம்

பேர்களுக்கு கொடுத்திருக்கின்றோம். இந்த ஆண்டு 15 இலட்சம் பேருக்குக் கொடுத்தால் 53 இலட்சம் பேர் வருகிறார்கள். இப்படிப்பட்ட உயர்கல்வி, விஞ்ஞானக் கல்வி கிடைக்கக்கூடிய சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு உருவாக்கியிருக்கிறது. இதுபோல வல்லரசு நாடுகளில்கூட கிடையாது. இன்றைக்கு தமிழகத்தில் விஞ்ஞானக் கல்வி வழங்குவதற்கு இந்தத் திட்டம் அடிப்படையாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உங்களுடைய அரசு. ஏழை, எளியோர்களின் அரசு, விவசாயிகளின் அரசு, ஒட்டுமொத்த தமிழகத்தினுடைய வாழ்வாதார பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி உங்களுக்கு அர்ப்பணிக்கின்ற அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, மிகச் சிறப்பாக, எழுச்சியாக இந்த நிகழ்ச்சியை ஏற்படுத்திய அனைவருக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி.

வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**